செ. கு. எண்:318 நாள் :5.12.2013

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 5.12.2013

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகரம், சென்னை – திருப்பதி சாலை அருகே 21.9.2013 அன்று இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த திருத்தணி, நேரு நகரைச் சேர்ந்த திரு. பாதுஷா;

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், களியல் கிராமம் அருகே 17.10.2013 அன்று இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த வெட்டுக்காட்டு புதுவல்விளை கிராமத்தைச் சேர்ந்த திரு. கிறிஸ்துகுமார்;

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், கோயம்புத்தூர் – பொள்ளாச்சி சாலையில் 18.10.2013 அன்று பேருந்திற்காக நின்று கொண்டிருந்த ஆச்சிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. துரைசாமி;

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், கெடிலம் பேருந்து நிலையம் அருகே 19.10.2013 அன்று சேந்தமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த திருமதி கண்ணம்மாள்;

வேலூர் மாவட்டம், ஆம்பூர் வட்டம், கீழ்முருங்கை கிராமம், சென்னை – பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் 22.10.2013 அன்று தேனி மாவட்டத்தை சேர்ந்த லாரி ஓட்டுநர் திரு. சரவணன், பேருந்தில் பயணம் செய்த ஆம்பூர் வட்டம், மாதனூர் கிராமத்தைச் சேர்ந்த திருமதி சகுந்தலா;

விழுப்புரம் மாவட்டம், அனந்தபுரம் கிராமம் அருகே 24.10.2013 அன்று ஆட்டோவில் பயணம் செய்த செஞ்சி வட்டம், மாத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. பிரேம்குமார்;

–– ஆகியோர் அரசுப் பேருந்து மோதியதில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

சென்னை, யானைகவுனி, அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோவில் அருகே அமர்ந்திருந்த திருமதி லட்சுமி என்பவர் மீது 22.10.2013 அன்று ஜீப் மோதியதில் அவர் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 23.10.2013 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சாலை விபத்துகளில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9